**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.299/2022

பெயர் : முருகேசன் (DW1) (Cross)

த/க/பெ. :

தேதி :16.09.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சொத்து பிரித்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வேறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எத்தனை அயிட்டம் என்றால் நினைவில்லை. சர்வே எண். 191, 193 மற்ற சர்வே எண்கள் நினைவில்லை. நஞ்சை நிலத்திற்காக வழக்கு போட்டுள்ளார்கள். விஸ்தீரணம் நினைவில்லை. நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் ஒவ்வொரு அயிட்ட சொத்திற்கும் சொல்ல இயலவில்லை. 1 வது அயிட்ட சொத்து நத்தம் என்றால் சரிதான். என் தந்தை அதில் கூறை வீடு முதலில் கட்டியிருந்தார் என்றால் சரியல்ல. நானும் என் உடன் பிறந்தவர்களும் தாவா சொத்தில் உள்ள கூறை வீட்டில் தான் பிறந்தோம் என்றால் சரிதான். நத்தம் மனையில்தான் பிறந்தோம். நாங்கள் அந்த வீட்டில்தான் வளர்ந்தோம் என்றால் சரிதான். என் தந்தை 1989 ல் இறந்துவிட்டார். என் தந்தை இறந்த பின்னர் நானும் என் உடன் பிறந்தவர்களும் அந்த கூறை வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். என்தந்தையின் இறப்பிற்கு பின்னர் என் தாயார் தான் மூத்தவர் என்றால் சரிதான். அதனால் தான் என் தாயார் பெயரில் பாட்டா கொடுத்தார்கள் என்றால் 1997 ல் இலவச பட்டா வழங்கினார்கள் அவ்வாறு கொடுக்கும் போது என் தாயார் பெயரில் கொடுத்தார்கள். அது தான் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 4 என்றால் சரிதான். குடும்பத்தில் மூத்தவர் என்ற அடிப்படையில் தான் என் தயார் பெயரில் இந்த பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ன் படியான முதல் அயிட்ட சொத்து என் தாயாருக்கான தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்தில் வாதிகளும், 1 முதல் 9 பிரதிவாதிகள் ஆர்சிசி வீடு கட்டினோம் என்றால் 2013- 2014 ல் என்னுடைய சொந்த பணத்தை கொண்டும் அரசாங்க வீட்டு மானியம் எனக்கு கொடுக்கப்பட்டதை கொண்டும் நான் தான் வீடு கட்டினேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேனா என்றால் அரசாங்கத்தில் கொடுத்துள்ளோம் இங்கு தாக்கல் செய்யவில்லை. பசுமை வீடு எனக்கு

ஒதுக்கியதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலும். செல்லம்மா பெயரில் உள்ள பட்டாவை கொடுத்து செல்லம்மா அக்ரிமெண்ட் போட்டு கொடுத்து அதன் பின்னர் என் பெயரில் ஒதுக்கினார்கள். அக்ரிமெண்ட் போட்டு கொடுத்த தேதி நினைவில்லை. செல்லம்மாள் எனக்கு அக்ரிமெண்ட் போட்டுக் கொடுத்தார். வீடு கட்டுவதற்காக பத்திரம் விண்ணப்பம் ஆகிவற்றை அரசாங்கத்தில் கொடுக்கவேண்டும் செல்லம்மாள் எனக்கு விட்டுக் கொடுத்து கையெழுத்து போட்டு கொடுத்ததை நான் பஞ்சாயத்து யூனியனில் கொடுத்தேன். அந்த அக்ரிமெண்ட் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். வாதிகள் 1 முதல் 9 பிரதிவாதிகள் சேர்ந்து தான் வீடு கட்டியானர்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் வாதி என் தாயார். அவர் வயதானவர், படிப்பறிவு அற்றவர். எழுதப்படிக்க தெரியாது. அவர் கைரேகை மட்டும் தான் வைப்பார் என்றால் சரிதான். அவருக்கு கண் பார்வை சரியாக தெரியாது என்றால் சரியல்ல. கொரோனா காலகட்டத்தில் என் தாயார் மருத்துவமனையில் இருந்தார் என்றால் வயதனா காரமணாக உடல் நல குறைவாக இருந்தார். அவருக்கு உடல் நிலை சரியில்லாதா காரணத்தாலும் படிப்பறிவு இல்லாததாலும் நானும் என் மனைவி 10 ம் பிரதிவாதியும் சேர்ந்து இன்சுரன்ஸ் போடே வேண்டும் என்று சொல்லி மோசடியாக 07.08.2020 ம் தேதி வழக்கு முதல் அயிட்டசொத்தின் அடிமனையை ஆவணம் எழுதி வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. அடிமனையை சட்டபூர்வமாக பதிவு செய்துள்ளோம். அது தான் வா.சா.ஆ. 1 ஆவணம் என்றால் சரிதான். நியாயமாக பதிவு செய்துள்ளோம். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சந்தை மதிப்பு ரூபாய் 64,100/- என்று போடப்பட்டுள்ளது. கிரய மதிப்பு எவ்வளவு போடப்பட்டுள்ளது என்றால் 2013-2014 ல் லேயே நான் கிரய தொகையை கொடுத்து விட்டேன். மீதி ரூபாய். 10, 000/- த்தை ஆவணத்தின் போது கொடுத்தேன். மொத்தம் எவ்வளவு கிரயம் பேசினேன் என்பது நினைவில்லை. மேற்சொன்ன விபரங்கள் பி.வா.சா.ஆ. 2 கிரய ஆவணத்தில் உள்ளதா என்றால் அவற்றை எல்லாம் கிரய ஆவணத்தில் எழுதமாட்டார்கள் அதில் எழுதிப்படவில்லை. பி.வா.சா.ஆ. 2 ஆவணமே பொய்யாக ஆவணம் என்பதால் தான் முத்திரை தீர்வை தவிர்க்கும் பொருட்டு தான் 10 ஆயிரம்என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சந்தை மதிப்பபை விட மிகவும் குறைவான விலையை குறிப்பிட்டு ஆவணம் எழுதி உள்ளேன் என்றால்

அடிமனையை வாங்கி அதில் நான் கட்டிடம் எழுப்பி விட்டதால் காலி மனைக்கான தொகையை மட்டும் குறிப்பிட்டு பதிவு செய்துள்ளேன். காலிமனைக்கான மதிப்பு தான் ரூபாய். 64,100/- என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ன் படி எவ்வித கிரய தொகையையும் 1ம் வாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 07.08.2020 ல் தாவா சொத்தில் ஆர்சிசி வீடு இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு வீடு இருக்கும் போது பி.வா.சா.ஆ. 2 கிரய ஆவணத்தில் மனை, கட்டுமானம் எதுவும் இல்லை என்று போடப்பட்டுள்ளது தவறு என்றால் தெரியவில்லை. தாவா 1 வது அயிட்ட சொத்தை பொருத்து 07.08.2020 ம் தேதியில் என்னாலும் என் மனைவியாலும் என் மனைவி பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் சட்டபடி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. செல்லாத செட்டில் மெண்ட் ஆவணத்தை அனுசரித்து ஏற்பட்ட பட்டா பி.வா.சா.ஆ. 7 செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 வீட்டு வரி ரசீது செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**